<u>IN THE COURT OF THE  SUBORDINATE COURT, VANDAVASI</u>
<u>CASE NO: OS.238/2024</u>
<u>DEPOSITION OF WITNESS: PW1</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name/பெயர் | : | இந்திரா | | : | |
| Father's/Husband's Name தந்தை/கணவர் பெயர் | : | செல்வகுமார் | Calling/ தொழில் | : | |
| Village/கிராமம் | : | ஆவடி | | : | |
| Taluk/தாலுக்கா | : | சென்னை | Age/வயது | : | 53 |

The witness sworn under Oaths Act 1969 on this the day of 08th day of April 2025.

**<u>முதல் விசாரணை</u>**

நான் சென்னை ஆவடியில் வசிக்கிறேன். நான் வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதியை தெரியும். முதல் விசாரணைக்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். படித்துபார்த்து கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

**<u>வாதி தரப்பில் தாக்கல் செய்யும் ஆவணங்கள்</u>**

1. 01.12.2003 தேதியில் வாதியின் தகப்பனார் தனபால் கவுண்டர் 1ம் பிரதிவாதியிடம் கிரையம் பெற்ற கிரையபத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகும்.
2. 01.12.2003 தேதியில் தனபால் கவுண்டர் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகும்.
3. 23.06.2008 தேதியில் தனபால் கவுண்டர் வாதிக்கு கிரையம் கொடுத்த கிரையப் பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆகும்.
4. 12.12.2011 தேதியில் கார்த்தி வாதிக்கு கிரையம் கொடுத்த கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆகும்.
5. 12.12.2011 தேதியில் கணபதி வாதிக்கு கிரையம் கொடுத்த கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5 ஆகும்.

6. 22.05.2008 தேதியில் 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6 ஆகும்.

7. 31.10.2023 தேதியில் வாதி, பிரதிவாதிகளுக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.7 ஆகும்.

8. வாதி கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பினை 1ம் பிரதிவாதி பெற்றுக் கொள்ளாமல் திருப்பியனுப்பிய அஞ்சலக உறை வா.சா.ஆ.8 ஆகும்.

9. வாதி கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பினை 2ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.9 ஆகும்.

எனவே, பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்பட்டது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

ஓம்/- எஸ்.சரண்யா
சார்பு நீதிபதி,
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்.